# அறுவடை காலத்தில் களிகூருங்கள்.



பிறருக்கு பகிர்ந்தளித்து போவாஸ் அறுவடைக்கான தன் நன்றியறிதலைக் காட்டினான்.

**ஜெபம்:** “அன்பான கர்த்தாவே, அறுவடைக்காகவும் பிற ஆசீர்வாதங்களுக்காகவும் நன்றி கூற குழந்தைகளுக்கு உதவுவீராக. போவாசைப் போல நீர் தந்த ஆசீர்வாதங்களைப் பிறரோடு பகிர்ந்து கொண்டு எங்கள் நன்றியறிதலைக் காட்ட உதவுவீராக!”

### தேவனுக்கு நன்றி கூறுங்கள்.


பிள்ளைகள், தேவனுக்கு தாங்கள் எந்த விஷயங்களுக்கெல்லாம் நன்றி கூறுகிறார்கள் என்பதை அறிவிக்கட்டும். இந்த ஆசீர்வாதங்களுக்காகப் பிள்ளைகள் ஜெபித்து தேவனுக்கு நன்றி கூறுவார்கள்.

ரூத் 2 ஆம் அதிகாரத்தில் இருந்து கதையை ஒரு ஆசிரியரோ பெரிய பிள்ளையோ வாசிக்கலாம் அல்லது கூறலாம். அறுவடையின் போது போவாஸ் ரூத்தை எவ்வாறு அன்போடு நடத்தினான் என்பதை இக் கதை விளக்குகிறது.

பிறரோடு பகிர்ந்து கொள்ளுவதின் மூலம் போவாஸ் எவ்வாறு தன் நன்றியறிதலை தேவனுக்குக் காட்டினான் என்பதை இது விளக்குகிறது. பெரியவர்களுக்கு இந்த நாடகத்தைப் பிள்ளைகள் நடித்துக் காட்ட சபைத் தலைவரோடு பேசி ஏற்பாடு செய்யவும். பிள்ளைகளுக்கு நீங்கள் போதிக்கும் போதே இந்த நாடகத்தையும் பயிற்சி செய்யவும். **பெரிய பிள்ளைகள்** சிறுவர்களுக்கு உதவி செய்வார்களாக. எல்லா பகுதியையும் நடிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

- எல்லா வேடங்களையும் ஏற்கப் போதுமான குழந்தைகள் இல்லாதபோது கதை கூறுபவர் அந்தகைய வேடங்களுக்காகக் குரல் மட்டும் கொடுக்கவும்.
- நடிகர்கள் நீளமான பேச்சை வேதாகமத்தில் இருந்து வாசிக்க விரும்பலாம்.
- போவாஸ், ரூத், நவோமி, வேலைக்காரன் ஆகிய வேடங்களைப் **பெரிய பிள்ளைகளோ** பெரியவர்களோ ஏற்கட்டும். ரூத் ஒரு பெரிய சாக்குப் பையை வைத்துக் கொள்ளட்டும்.

**சிறிய பிள்ளைகள்** பல அறுவடையாளர்கள் மற்றும் அவர்களின் தலைவன் வேடத்தை ஏற்கட்டும். அறுவடையாளர்கள் கதிர் அரிவாட்களை உபயோகிப்பது போல் பாவிக்கவும்.



**கதை கூறுபவர்:** “ஒரு விவசாயியான போவாஸ், அறுவடையின் போது, விதவையான ரூத்திடம் எவ்வாறு கருணை காட்டினான் என்பதை ரூத் 2 ஆம் அதிகாரம் காட்டுகிறது.”

**அறுப்பவர்கள்:** கதிர் அரிவாளாளல் சிலர் அறுப்பதுபோல் நடிக்கவும். சிலர் கட்டுவது போலவும், சிலர் சுமப்பது போலவும், இரண்டு பெண்கள் பேசுவது போலவும் காட்சி அமையட்டும்.

**ரூத்** : அறுப்பவர்களை சுட்டிக்காட்டி, நவோமியிடம் (ரூத். 2:2): “மாமி! நான் வயலுக்குப் போய் கதிர் பொறுக்கி வருகிறேன். ஒரு வேளை விவசாயியின் கண்களில் தயை கிடைக்கும்!”

**நவோமி** : “போய் வா, மகளே!” (கதிர் அறுப்பவர்களை பின் தொடர்ந்து, மணிகளைப் பொறுக்கி, சாக்கில் இடுகிறாள்).

**போவாஸ்:** “வணக்கம்! அறுவடையாளர்களே! தேவன் உங்களோடு இருப்பாராக!”

**வேலைக்காரன்:** (அறுவடை செய்வோரின் அருகில் நின்று) “வணக்கம், போவாஸ்! தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக!”

**போவாஸ்:** ரூத்தைப் பார்த்தவாறே வேலைக்காரனிடம், “இந்தப் பெண் யாருக்கு சொந்தக்காரி?”

**வேலைக்காரன்** (2:6-7): “இவள் மோவாபில் இருந்து நவோமியுடன் வந்தவள். அவள், சிந்தும் தானியங்களை பொறுக்கிக் கொள்ளுவதாகக் கேட்டாள்!”

**போவாஸ்** (ரூத்திடம், 2:8-9): “மகளே, கேள்! நீ இன்னொரு வயலுக்கு கதிர் பொறுக்கப் போக வேண்டாம். என்னுடைய வேலைக்காரப் பெண்களோடு கூடவே இரு! அவர்கள் அறுக்கும் வயலைப் பார்த்து அவர்கள் பின்னால் போ! ஒருவரும் உன்னைத் தொடாதபடிக்கு வேலைக்காரர்களுக்கு கட்டளை இட்டு இருக்கிறேன். உனக்குத் தாகம் எடுத்தால் தண்ணீர் குடங்களண்டைக்குப் போய், வேலைக்காரர் மொண்டு கொண்டு வருவதில் குடிக்கலாம்!”

**ரூத்** : போவாசை தரையில் முகம் குப்புற விழுந்து வணங்கி, (ரூத் 2:10): “நான் அந்நிய தேசத்தாளாய் இருக்க நீர் என்னை விசாரிக்கும்படி எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயை கிடைத்தது?”



**போவாஸ்:** (2:11-12) “உன் புருஷன் மரணம் அடைந்த பின்பு, நீ உன் மாமியாருக்கு செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜன்ம தேசத்தையும் விட்டு முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும், எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது. உன் செய்கைக்குத் தக்க பலனை கர்த்தர் உனக்குக் கட்டளை இடுவாராக! இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக!”

**ரூத்** (2:13) : “என் ஆண்டவனே! உம்முடைய கண்களில் எனக்கு தயை கிடைக்க வேண்டும். நான் உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கு சமானமாய் இராவிட்டாலும், நீர் எனக்கு ஆறுதல் சொல்லி உம்முடைய அடியாளோடு பட்சமாய்ப் பேசினீரே?”

**போவாஸ்** (2:14): “நீ இங்கே வந்து, இந்த அப்பத்திலே புசித்து, காடியிலே உன் துணிக்கையைத் தோய்த்துக் கொள்!”

**கதை கூறுபவர்** (2:14) “அப்படியே அவள் அறுக்கிறவர்கள் அருகே உட்கார்ந்தாள். அவளுக்கு வறுத்த கோதுமையைக் கொடுத்தல். அவள் சாப்பிட்டு திருப்தியடைந்து மீந்ததை வைத்துக் கொண்டாள்.”

**போவாஸ்** : (வேலைக்காரரிடம் நடந்து சென்று கூறுகிறான். 2:15-16): “அவள் அரிக்கட்டுகள் நடுவே பொறுக்கிக் கொள்ளட்டும். அவளை ஈனம் பண்ண வேண்டும். அவள் பொறுக்கிக் கொள்ளும்படிக்கு அவளுக்காக அரிகளிலே சிலதை சிந்த விடுங்கள். அவளை அதட்டாது இருங்கள்!”

**கதை கூறுபவர்** (2:17-18): “அப்படியே அவள் சாயுங்கால மட்டும் வயலில் கதிர் பொறுக்கினாள். பொறுக்கியதை அவள் தட்டி அடித்துத் தீர்த்த போது அது ஏறக்குறைய ஒரு மரங்கால் வாற் கோதுமை கண்டது. அவள் அதை எடுத்துக்கொண்டு ஊருக்குள் வந்தாள். அவள் பொறுக்கியதை அவளுடைய மாமி பார்த்தாள்.”

**நவோமி** (2:19-20): “இன்று எங்கே கதிர் பொறுக்கினாய்? எவ்விடத்தில் வேலை செய்தாய்? உன்னை விசாரித்தவன் ஆசீர்வதிக்கப்படுவானாக. உயிரோடு இருக்கிறவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் தயவு செய்கிற கர்த்தராலே அவன் ஆசீர்வதிக்கப்படுவானாக!”

**கதை கூறுபவர்:** உதவி செய்த அனைவருக்கும் நன்றி கூறி விட்டு பின் கூற வேண்டியது: “போவாசும் ரூத்தும் திருமணம் செய்து கொண்டனர். அவர்களது குழந்தையான ஒபேத்தின் மகனே, தாவீது இராஜாவின் தந்தையான ஈசாய். கிறிஸ்துவுக்குப் பின் அதிகமாக வேதாகமத்தில் பேசப்படும் மனிதன் மாபெரும் இஸ்ரவேலின் இராஜாவாகிய தாவீதே. இயேசு, போவாஸ்-ரூத்தின் வம்சத்தில் வந்தவரே.”



**படம் :** பிள்ளைகள் ஒரு கதிர் கட்டு அல்லது அரிவாளின் படம் வரைக. நாம் அறுப்பு மற்றும் பிற ஆசீர்வாதங்களுக்கு தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம் என்பதை இவை காட்டுகின்றன என்று பெரியவர்களுக்கு விளக்கவும்.

**மனப்பாடம்:** ரூத். 2:12.

**இரண்டு பிள்ளைகள்** ஏசாயா 9:3 & 2 கொரி. 9:11 ஐ ஒப்புவிக்கவும்.

அறுவடை மற்றும் ஆசீர்வாதங்களுக்காக நன்றி கூறுவது பற்றி **பெரிய பிள்ளைகள்** பாடல், கவிதை அல்லது நாடகம் எழுதட்டும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net